# 10

# பாடுகளை இயேசு சமாளித்தது எப்படி?

How Jesus handled Suffering

இயேசு சிலுவையைச் சுமந்து, பின்னர் மரித்தார். நாமோ முதலில் மரித்துவிட்டுப் பின்னர் வாழ்நாளெல்லாம் சிலுவை சுமக்கிறோம் (கொலோ 3:3; மத் 10:38). எனவேதான் பவுல் தனது வாழ்வின் பிரதான நோக்கத்தைப்பற்றிப் பேசுகையில் முதலாவது ''கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையையும்,'' அடுத்து ''அவரது பாடுகளின் ஐக்கியத்தையும்'' குறிப்பிடுகிறார் (பிலி 3:10). பாடுபட்டுப் பின்னர் உயிர்த்தெழுதல் அல்ல; உயிர்த்தெழுந்து அதற்குப் பின்னர் பாடுகள். உபத்திரவத்தின் உலைக்களத்திற்குள் நம்மை எடுத்துச் செல்லுமுன் கடவுள் தமது வல்லமையினால் நம்மை உடுத்துவிக்கிறார். பாடுகளைச் சமாளிக்க நமக்குப் பலமளித்துவிடுகிறார்.

''கிறிஸ்துவின் பாடுகளின் ஐக்கியம்'' என்றால் பொருளென்ன? அது ஒரு வரமா, அருளா அல்லது அனுபவமா? ஐக்கியம் என்பது அறிவின் அடிப்படையில் உருவாகின்ற உறவு அல்லது நட்பு ஆகும். முதல் ஆடவனுக்கும் முதல் பெண்மணிக்கும் ஏற்பட்ட உள்ளுறவு, ''ஆதாம் தனது மனைவியாகிய ஏவாளை அறிந்தான்'' என வருணிக்கப்பட்டுள்ளது (ஆதி 4:1அ). கிறிஸ்துவின் பாடுகளின் ஐக்கியம் என்றால் அவர் எவ்விதம் பாடுபட்டாரென்றும் பாடுகளை எப்படிச் சமாளித்தாரென்றும் புரிந்துகொள்வதும், அப்படிப்பினைகளை நமது வாழ்க்கையில் பயிற்சிப்பதுமாகும். யோவான் அப்போஸ்தலன் தன்னைக் கிறிஸ்துவின் உபத்திரவங்களுக்கு ''உடன் பங்காளன்'' என்று அறிமுகப்படுத்தியது இதனாலேயே (வெளி 1:9).

கிறிஸ்துவின் பாடுகளைப் பயபக்தியோடும் நடுக்கத்தோடும் படிக்கவேண்டும். அது ஒரு புனிதத்தலத்தில் நிற்பது போன்றது. அதைக் கவனிக்கும்போது நமது காலணிகளைக் கழற்றிவிடவேண்டும். அது எரிந்துகொண்டிருக்கும் முட்புதர். அது உண்மையாகவே நெருப்புதான். ஆனால் அந்த அக்கினி கிறிஸ்துவைச் சாம்பலாக்க



முடியவில்லை. அவர் ''நெருப்பினால் சோதிக்கப்படும்போது கடவுளின் வல்லமையால் காக்கப்பட்டார்'' (1 பேது 1:5,7). வாழ்நாள் முழுவதும் இயேசு நெருப்புக்குள்ளேதான் நடந்தார்; ஆனால் அவரது மண்ணுலக வாழ்வின் இறுதி வாரத்தில் சூளை ஏழு மடங்கு அதிகம் சூடாக்கப்பட்டது. இந்த வாரத்தில் அவர் அனுபவித்த பாடுகளிலிருந்து முக்கியமான ஐந்தினைப் பொறுக்கியெடுத்து அவற்றை அவர் எவ்விதம் சமாளித்தாரெனப் படிப்போம்.

### *1. மரண பயம்*

மரண பயத்தினால் இயேசுவின் வாயில் பிறந்த வார்த்தைகளைச் சுவிசேஷகர்கள் நால்வரில் மூவர் எழுதி வைத்துள்ளனர். ''இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் தம்முடன் கூட்டிக் கொண்டுபோய், திகிலடையவும் மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார். அப்பொழுது அவர்: என் ஆன்மா சாவுக்கு ஏதுவான வருத்த முற்றிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி விழித்திருங்கள் என்றார்'' (மாற் 14:33,34).

சாவதற்காகத்தான் தாம் வந்திருப்பது முதல் நாள் துவக்கியே இயேசுவுக்குத் தெரியும். தாம் சிலுவையிலறையப்படப்போவதைத் துவக்கமுதலே அவர் அறிந்திருந்தார். ஆனால் அந்த நேரம் நெருங்கியபோதோ, அவரைத் ''திகிலும் வியாகுலமும்'' கவ்வின. சாவைவிடச் சாவைக் குறித்த பயமே அதிமோசம். சாவு நமது கதவைத் தட்டும்வரை சாவைப்பற்றிப் பேசுவது சுலபம். மனுக்குலத்தைச் சாவின் பயமானது வாழ்நாள் முழுவதும் ஆட்டிப்படைக்கிறதென்று கடவுளுக்குத் தெரியும். மரண பயத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை அதிகாரப்பூர்வமாக விடுவிக்கவே இயேசு மனுவுருவெடுத்தார் (எபி 2:14,15).

மரண பயத்தைச் சமாளிக்க இயேசு இரு வல்ல ஆயுதங்களைக் கையாடினார் —

*அ) அர்ப்பணிப்பின் ஜெபம்*

மரண பயம் ஆண்டவரை ஆட்கொண்டபோது அவர் சரித்திரம் அறியாத அர்ப்பணிப்பு ஜெபமொன்றை ஏறெடுத்தார். ''என் தந்

தையே, கூடுமானால் இத்துன்பக் கலம் என்னைவிட்டு அகலட்டும்; எனினும், என் விருப்பப்படி அன்று, உமது விருப்பப்படியே ஆகட்டும்'' என்றார் (மத் 26:39). இதே ஜெபத்தை மூன்று தடவை அவர் செய்தார் என்பது அவரது உருக்கத்தைக் காட்டுகிறது. தமது மகனின் ஜெபத்தில் அவ்வளவாய் மனமலர்ந்த தந்தையானவர் விண்ணகத்திலிருந்து சிறப்புத் தூதன் ஒருவனை அனுப்பித் தமது மகனைத் திடப்படுத்தினார் (லூக் 22:42-45). அவரது தளர்ந்த கரங்கள், தள்ளாடும் முழங்கால்கள் மற்றும் தடுமாறும் பாதங்கள் எழுந்து நின்று எதையும் சமாளிக்கப் பலம் பெற்றன (எபி 12:12). தமது சீடரைப் பார்த்து, ''எழுந்திருங்கள், போகலாம்'' என்று தட்டியெழுப்பினார் அவர்! (மத் 26:46).

தேவதூதர்களின் வருகை எப்பொழுதுமே சிறைச்சாலைக் கதவுகளை உடைத்தெறியத்தான் என்று நினைத்துவிடக்கூடாது. கெத்செமனே தோட்டத்தில் தேவதூதன் தோன்றியது இறைமகனைப் போர் வீரரிடமிருந்து தப்புவிக்க அல்ல, அவர் அந்த இக்கட்டான சூழலைச் சமாளிக்க உதவுவதற்காகவே (யோ 12:27). இயேசுவைத் திருத்தூதன் பலப்படுத்திய பின்னரும் அவரது மனவேதனை அப்படியே தானிருந்தது! தூதன் அவருக்குப் பணிசெய்துகொண்டிருக்கும் அதே வேளையில் அவரோ இரத்த வியர்வை சிந்திக்கொண்டிருந்தார்! (லூக் 22:43,44). இதுதான் பாடுகளின்போது வெளிப்படும் தெய்வீக வல்லமை என்பது. ஜெபத்திற்குப் பதில் பெரும்பாலும் தாங்கும் சக்திதானேயன்றி விடுவிக்கும் வல்லமையன்று.

இங்கு கற்றுக்கொள்ளவேண்டிய இன்னொரு படிப்பினை என்னவெனில்: ஜெபிக்கவேண்டிய பொறுப்பு முக்கியமாக பாடுபடுபவருக்குத்தானிருக்கவேண்டும். ''உங்களில் ஒருவன் பாடுபட்டால் *அவன்* ஜெபிக்கட்டும்'' (யாக் 5:13அ). பாஸ்டர் பீட்டரையோ, சுவிசேஷகர் யாக்கோபையோ, தீர்க்கதரிசி யோவானையோ உங்களுக்காக ஜெபிக்கச் சார்ந்துவிடாதீர்கள். ஒருவர் தூங்குவார், மற்றவர் உறங்குவார், அடுத்தவர் குறட்டை விடுவார்! அவர்களை அமிழ்த்துவதற்கு அவர்களது சொந்தப் பிரச்னைகளே ஏராளம்! (லூக் 22:45). சரியாய்க் கவனித்துப் பார்த்தால், அன்று தோட்டத்தில் இயேசு தமது சீடர்களிடம் ''தமக்காக'' அல்ல, ''அவர்களுக்காகவே,'' அதாவது ''அவர்கள்'' சோதனையில் விழுந்துவிடாதிருக்கவே ஜெபிக்கச் சொன்னார். ''இங்கே உட்கார்ந்து விழித்திருங்கள்'' என்று சொன்னது தமக்கு ஓர் ஆதரவும் பக்கபலமுமாய் இருக்கவேண்டும் என்பதற்காகவே (மத் 26:38; மாற் 14:34). மற்றவர்கள் நமது ஜெபத்திற்கு உதவியாயிருக்கலாம்; நமக்குப் பதிலாய் ஜெபிக்க முடியாது. பாடுபடுபவரைப் போன்று வேதனையை யாராலும் புரிந்துகொள்ள முடியாது.



### *ஆ) உயிர்த்தெழுதலின் நம்பிக்கை*

ஆறிலும் சாவு நூறிலும் சாவு! சாவானது பாரபட்சமே காட்டாது. ஆனால் பெரிய வெள்ளியோடு எல்லாம் முடிந்துபோகாது, ஈஸ்டர் ஞாயிறு வரும்! பாடுபடும்போதும் சிலுவையிலறையப்படும்போதும் இயேசுவின் விசுவாசத்திற்கு மெருகேற்றியது உயிர்த்தெழுதலின் நம்பிக்கையே. உயிர்த்தெழுதலின் ஆரவாரத்தை எதிர்பார்த்தே அவர் சிலுவையைச் சகித்தார். மாட்சிமை பெறப்போவதை மனதிற்கொண்டே அவமானத்தை அலட்சியம்பண்ணினார் (எபி 12:2). பாவிகளின் எதிர்ப்பு அவருக்கு ஏமாற்றத்தைத் தந்தது; ஆனால் அவர் சோர்ந்துபோகவில்லை (வச 3). இன்றைய முட்கிரீடத்தைச் சகிக்க நாளைய முடிசூட்டு இயேசுவுக்கு உற்சாகம் தந்தது! தமது மரணத்தைப்பற்றிப் பேசும்போதெல்லாம், இயேசு தமது உயிர்த்தெழுதலையும் குறிப்பிட்டார். எடுத்துக்காட்டாக, மாற்கு 9:30,31 மற்றும் 10:32-34ஐப் பாருங்கள்.

மரண பயத்தினால் அலைக்கழிக்கப்பட்டபோதெல்லாம் இயேசு சங்கீதம் 16:9-11ஐத் தமக்கு நினைவுபடுத்திக்கொண்டிருப்பாரென நான் நம்புகிறேன்: ''என் ஆன்மாவைப் பாதாளத்தில் விட்டுவிடமாட்டீர்; உமது பரிசுத்தரை அழிவைக் காணவிடமாட்டீர் ... உமது சமூகத்தில் எனக்கு நிறைவான மகிழ்ச்சியைக் காட்டுவீர்.''

அன்றைய விசுவாச வீரரது கண்கள் முடிவான உயிர்த்தெழுதலில் பதிக்கப்பட்டிருந்ததாலேயே அவர்கள் உடனடி விடுதலையை ஏற்க மறுத்துவிட்டனர் (எபி 11:35). இடைவிடாத பாடுகளைத்தான் பவுல் அப்போஸ்தலன் ''நாழிகைதோறும் நாசமோசம்'' என்றும் ''நாள்

தோறும் மரணவாசம்'' என்றும் குறிப்பிடுகிறார் (1 கொரி 15:30,31). உயிர்த்தெழுதலின் நம்பிக்கையினாலேயே இவ்வித வாழ்க்கையைக் குறித்துப் பெருமிதம் கொண்டார். அவர் விட்ட சவால் இதோ: ''சாவே, உன் வெற்றி எங்கே? பாதாளமே, உன் கொடுக்கு எங்கே?'' (வச 55). ''நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் நமக்கு வெற்றி தரும் கடவுளுக்கு நன்றி!'' என்று தனது பாடுகளின் பாடலை முடித்தார் (வச 57). பாடுகளில் அனுபவிக்கும் அளவுக்குக் கடவுளின் வல்லமையை வாழ்வின் வேறு எந்த அனுபவத்திலும் அனுபவிக்க இயலாது.

### *2. நண்பரிடம் பட்ட காயங்கள்*

கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்த முக்கியமானதொரு தீர்க்க தரிசனம் சகரியா 13:6இல் உள்ளது. ''ஒருவன் அவனைப் பார்த்து: உன் கைகளில் இந்தக் காயங்கள் உண்டானதெப்படி என்று கேட்டால், என் நண்பர்களின் வீட்டில் நான் பட்ட காயங்கள் இவை என்று அவன் சொல்லுவான்.''

நண்பர்களால் காயப்படுவதுபோன்று நம்மை வருத்துவது எதுவுமில்லை. இயேசுவைக் காட்டிக்கொடுத்தது யார்? அவரது நிதி மந்திரி. அவரைத் தெரியாதென்று மறுதலித்தது யார்? அவரது முதல் மந்திரி. அவரை விட்டு ஓடியது யார்? அவரது மற்ற மந்திரிகள்.

தாவீதரசனின் வாழ்க்கைச் சம்பவங்கள் பலவற்றில் தாவீதின் குமாரனது வாழ்க்கை பல்வேறு கோணங்களில் தீர்க்கதரிசனமாகப் பிரதிபலித்தது. இதோ தாவீதின் ஒரு புலம்பலைக் கவனியுங்கள்: ''என் எதிரி என்னை நிந்தித்திருந்தால் அதைப் பொறுத்துக்கொண்டிருப்பேன்; என்னைப் பகைத்தவன் எனக்கு எதிராய்க் கிளர்ந்து எழுந்தால் அவனிடமிருந்து தப்பியோடி ஒளிந்திருப்பேன். ஆனால் என் நண்பனும் என் உயிர்த் தோழனுமாகிய நீயே என்னை எதிர்த்தாய்! உன்னோடு இனிய நட்புறவு கொண்டிருந்தேனே! விழாக்கூட்டத்தில் இறைவனின் இல்லத்தில் நாம் ஒன்றாய் இருந்தோமே... நான் நம்பியிருந்த நண்பன், என்னோடு உணவுகொண்ட அந்த நண்பனுங்கூட, என்னை மிதிக்கக் காலைத் தூக்குகிறான்'' (சங் 55:12-14; 41:9). தாவீதுக்கு விரோதமாய் எழும்பினவர்கள் அவனது நெருங்கிய நண்பரும், குடும்பத்தினரும், உடன் விசுவாசிகளும்தான். இயேசுவுக்குக் கிடைத்ததும் இதுவே. நாம் மட்டும் தப்பவிடுவோமா என்ன?



நண்பர்களிடமிருந்து வந்த காயங்களைக் கடவுள் மீதுள்ள பற்றுறுதியினாலும் அவர்கள்மீது கொண்டுள்ள அன்பினாலும் இயேசு தாங்கிக்கொண்டார்.

*அ) பாதுகாப்பின் நிச்சயம்*

நாம் வெகுவாய் நம்பியவர்களிடமிருந்து ஏமாற்றமடையும்போது நமது பாதுகாப்பைக் குறித்த நிச்சயமின்மையே நம்மைச் சிதறடித்து விடுகிறது. தமது விண்ணகத் தந்தையின்மீது நங்கூரமிடப்பட்ட பாதுகாப்பு தமக்கு உண்டு என்று இயேசு அறிந்திருந்தபடியால் யார் என்ன பேசினாலும் என்ன செய்தாலும் அவர் அதிரவில்லை.

பிசாசு தத்ரூபமாக யூதாசின் இதயத்திற்குள் நுழைந்து அவனது ஆண்டவரை அவன் காட்டிக்கொடுக்கும்படி அவனைத் தூண்டினான். தமது ஆன்மாவை ஒரு வாள் துளைத்துச்செல்லும் அனுபவத்தைவிடக் கொடியது இயேசுவுக்கு அவ்வனுபவம். ஆனாலும் அவர் தகர்ந்துவிடவில்லை, நிதானமாக இருந்தார். ஏனெனில், தந்தையானவர் எல்லாவற்றையும் தமது கைகளில் கொடுத்திருக்கிறாரென்றும், தாம் தந்தையிடமிருந்து வந்து தந்தையிடமே திரும்புகிறாரென்றும் இயேசு ''அறிந்திருந்தார்'' (யோ 13:2,3). கொலைகாரர் கையில் இயேசுவை யூதாஸ் ஒப்புக்கொடுத்தது உண்மைதான். ஆனால் எல்லாவற்றையும் பிதாவானவர் தமது கைகளில் ஒப்புக்கொடுத்துவிட்டார் என்ற அறிவினால் இயேசு யூதாசின் செயலின் வேதனையை மேற்கொண்டார். போர்ச்சேவகர்கள் அவரைக் கொல்கொதா மலைக்குத்தான் நடத்திச்செல்லுகிறார்களென்று அனைவரும் எண்ணினர். ஆனால் தாம் விண்ணகத்திற்குத் தமது தந்தையிடம் நடந்து செல்கிறாரென்று இயேசு உணர்ந்தார்! காட்டிக்கொடுக்கப்பட்டு மறுதலிக்கப்படும்போது கடவுள்மீது நமக்கிருக்கும் பற்றுறுதி எவ்வளவு வித்தியாசத்தை உண்டாக்குகிறது பாருங்கள்!

விண்தந்தை நமக்கு அருளியிருக்கும் எதையும் நண்பரோ, குடும்பத்தினரோ, எதிரிகளோ நம்மிடமிருந்து பறிக்க முடியாது. நம்மிடமிருந்து பணத்தைப் பறித்துக்கொள்ளலாம்; ஆனால் நம்மிடமுள்ள தேவ பலத்தைப் பறித்துக்கொள்ள முடியாது! உங்கள் வேலையுயர்வை யாரும் நிறுத்திவிடலாம்; ஆனால் கிறிஸ்துவில் உங்கள் நிலையை யாரும் அசைக்க முடியாது! திருட்டு என்பது இவ் வுலகைச் சேர்ந்தது; நாமோ மேலுலகில் அல்லவோ செல்வந்தராக்கப் படுகிறோம்? (எபே 1:3; மத் 6:20). மக்கள் உங்களை மறக்கலாம்; இயேசு ஒருபோதும் கைவிடார்! (எபி 13:5ஆ) ''கடவுள் நம் பக்கம் இருந்தால் யார் நமக்கு எதிராய் நிற்க முடியும்?'' (ரோ 8:31). ''எனவே நாம் தைரியமாய்: கடவுளே எனக்குத் துணை, அஞ்சேன், மனிதர் எனக்கு என்ன செய்யமுடியும்? என்று சொல்லலாம்'' (எபி 13:6).

*ஆ) அன்பின் பணி*

நாம் அதிகம் நம்பியவர்கள் நம்மைக் கைவிடும்போது நாம் வெகு வாய்ப் பாதிக்கப்படுகிறோம். அவர்களைத் திட்டுகிறோம். அவர்கள் பக்கம் திரும்புவதில்லை. நம்மைப் போலவே எல்லாக் காரியங்களி லும் இயேசு சோதிக்கப்பட்டதாகத் திருமறையில் குறிப்பிடப்பட்டுள் ளதால், அவருக்கும் இவ்விதச் சோதனைகள் வந்திருக்கும். அவரோ, தொடர்ந்து தமது சீடருக்குப் பணிசெய்து, முந்தியைவிடக் கூடுதல் அன்பை அவர்கள்மீது சொரிந்து சோதனையை மேற்கொண்டார். இதோ, யோவான் எழுதியுள்ளதைக் கவனியுங்கள்: ''இவ்வுலகை விட்டுப் பிதாவிடம் போகவேண்டிய தமது நேரம் வந்ததென்று இயேசு அறிந்து, தாம் இவ்வுலகிலிருக்கிற தம்முடையவர்களிடம் அன்புவைத்தபடியே முடிவுவரை அன்புவைத்தார் ... அவர் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி, சீடர்களுடைய பாதங்களைக் கழுவி, இடுப்பில் கட்டியிருந்த துண்டால் துடைக்கத் தொடங்கினார்'' (யோ 13:1-5).

தமது சீடர்கள் தவறினாலும் எவ்வளவாய் இயேசு அவர்களை நேசித்தார் என்பதை விளக்கும் வகையில் பவுல் அப்போஸ்தலன் பின்னர் இப்படி எழுதினார்: ''கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இரவில் அப்பத்தை எடுத்து ...'' (1 கொரி



11:23). காட்டிக்கொடுத்தவனையும் அந்த இரா விருந்தில் இயேசு சேர்த்துக்கொண்டார்! மக்கள் நல்லவர்களாய் ''இருந்தால்'' என்று அல்ல, அவர்கள் கெட்டவர்களாய் ''இருந்தாலும்'' நாம் அவர்களை நேசிக்கவேண்டும். இல்லையேல் இந்த உலகில் நாம் அன்பு செலுத்தக்கூடிய நபர் ஒருவரும் இருக்கமாட்டார்!

பாதங்களைக் கழுவியது மன்னிப்பு, சுத்திகரிப்பு, பிணைப்பு ஆகியவற்றிற்கு அடையாளமாகும் (யோ 13:8-10). அன்றிரவும் அதற்குப் பின்னரும் தமது சீடர்கள் செய்யப்போகும் பாவங்களுக்காக அவர்களை முன்னதாகவே இயேசு கழுவிவிட்டார் போலும்! பேதுரு வின் விசுவாசம் எவ்வளவாய் ஆட்டம்காணுமென்று இயேசு அறிந் திருந்தார். ஆனாலும் அவர் அவரை எவ்விதம் உற்சாகப்படுத்தினார் பாருங்கள்: ''உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடி உனக்காக மன்றாடியுள்ளேன். நீ திருந்தியபின் உன் சகோதரர்களை உறுதிப் படுத்து என்றார்'' (லூக் 22:31,32). பேதுருவுக்காக இயேசு செய்த பிரார்த்தனை முழுக்க முழுக்க பயன் தந்தது. பேதுரு எழுதிய நிருபங் களைக், குறிப்பாய் முதலாவது நிருபத்தைக், கவனித்துப்பாருங்கள். அதிலுள்ள ஐந்து அத்தியாயங்கள் ஒவ்வொன்றிலும் அவன் நெருப்பு போன்ற பாடுகள், உபத்திரவங்கள் வழியாய்க் கடந்துசெல்லும் விசு வாசிகளை எவ்வளவாய் ஊக்குவிக்கிறார்! (1 பேது 1:5,6; 2:21; 3:9; 4:12,13; 5:9). இந்த நிருபம் இன்று நமக்கும் எவ்வளவு ஆசீர் வாதமாய் இருக்கிறது! ஆம், பாடுகளை இறைவனது பாணியில் சந்தித்துச் சமாளித்தால் விளைவு மாட்சிமையாகவும் முடிவு நெடு கவே சாட்சியாகவும் இருக்கும்.

### *3. தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுதலும் அநியாயமும்*

இயேசு அநியாயமாய்க் குற்றஞ்சாட்டப்பட்டார். அவருக்கு நியாய மான தீர்ப்பு வழங்கப்படவில்லை. அவர் முழுக்க முழுக்கத் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டார். ''இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள்; நான் அதை மூன்று நாளில் எழுப்புவேன்'' என்று அவர் கூறியபோது கல்லினாலும் சாந்தினாலும் கட்டப்பட்ட எருசலேம் தேவாலயத் தையே அவர் குறிப்பிடுகிறாரென யூதர் நினைத்தனர். அவரோ இரத்தமும் சதையுமான தமது உடலைக் குறித்தே பேசினார் (யோ

2:19-21). மோசேயின்மூலம் வந்த திருச்சட்டங்களுக்கு மேலாக அவர் எதிர்பார்ப்பை உயர்த்தியபோது, நியாயப்பிரமாணத்தை அழிக்க அல்ல, அதை நிறைவேற்றவே தாம் வந்திருப்பதாக அவர் தெளிவாக்க வேண்டியதாயிற்று (மத் 5:17). வரி செலுத்துவதைப் பற்றிப் பேசுகையில் அவர் துல்லியமாக, ''ராயனுடையதை ராயனுக்கும் கடவுளுடையதைக் கடவுளுக்கும் கொடுங்கள்'' என்று போதித்தார் (லூக் 20:21-25). ஆனால் அதிபதியாகிய பிலாத்துவின் முன்னர் மக்கள் அவரைக் குற்றஞ்சாட்டியபோது, ''இவன் தன்னைக் கிறிஸ்து என்ற ராஜா என்றும், ராயருக்கு வரிகொடுக்க வேண்டியதில்லை என்றும் சொல்லி, மக்களைக் கலகப்படுத்தக் கண்டோம்'' என்றனர் (23:1,2).

கிறிஸ்துவின் நெருங்கிய சீடரும்கூட, அவர் அவர்களிடம் வெளிப்படையாய், ஒரு நண்பனைப்போல் பேசியும், அவரது கூற்றுக்கள் பலவற்றைத் தவறாகவே புரிந்தனர். பரிசேயர் சதுசேயரின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையிருக்கும்படி அவர் சொன்னபோது, சாப்பாடு எடுத்துவரத் தாங்கள் மறந்துவிட்டதால் சாடையாய் இப்படிச் சொல்லுகிறாரென்று சீடர் நினைத்துக்கொண்டனர் (மத் 16:6,7). தமது இரண்டாம் வருகைவரை தமக்குச் சித்தமானால் யோவான் உயிரோடிருந்தால் ''உனக்கென்ன?'' என்று இயேசு பேதுருவைக் கடிந்துகொண்டபோது, அப்படியானால் யோவான் சாகவே மாட்டான் என்று சீடர்களுக்குள் பேச்சு பரவிற்று! (யோ 21:21-23).

இயேசு தமது வார்த்தைகளில் பிழையற்றிருந்தார். அவரைவிட நேர்த்தியாக யாரும் பேசியிருக்க முடியாது. அவரது நாட்களில் அவரே இவ்வளவு தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டிருப்பாரானால் இந்தச் சிலுவைக்கு நாம் தப்ப முடியுமா? எத்தனை முறை நமது குடும்பத்தினர் மற்றும் உடன் பணியாளரிடம் ''நீங்கள் புரிந்துகொண்டது தவறு; நான் அவ்விதம் அர்த்தப்படுத்தவில்லை'' என்று மன்றாடவேண்டியதிருக்கிறது! பட்ட மரத்திற்குப் பாடுகள் பச்சை மரத்தைவிடக் குறைவாகவா இருக்கும்?

தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுதலையும், அநியாயத்தையும் இயேசு எவ்விதம் சகித்துச் சமாளித்தாரெனக் கவனிப்பது பாடுகளில்



வெளிப்படும் தெய்வீக வல்லமையைக் குறித்து குறைந்தது மூன்று படிப்பினைகளையாவது நமக்குத் தரும் —

*அ) ''இறைவன் சிங்காசனத்தில்தான் இருக்கிறார்!''*

''நீங்கள் என்னைத் தவறாய்ப் புரிந்துகொள்ளலாம், ஆனால் விண்ணிலிருக்கும் என் தந்தைக்கு என் இருதயம் தெரியும். நீங்கள் என்னை இரக்கமின்றி நடத்தலாம், ஆனால் விண்ணிலிருக்கும் என் தந்தை எனக்கு நியாயம் செய்வார். நீங்கள் பிரதம மந்திரி அல்லது நாட்டுத் தலைவரது ஆசனத்தில் அமர்ந்திருக்கலாம், ஆனால் விண்ணக அரியணையிலிருப்பதோ எனது தந்தை.'' தம்மைத் தவறாய் மக்கள் புரிந்துகொண்டு இம்சைப்படுத்தியபோது இயேசுவின் மனதில் இவ்விதம்தான் பதில் எழுந்திருக்கும். பிலாத்துவுக்கும் குருக்களுக்கும் அவர் கொடுத்த பதில்களைக் கவனியுங்கள் —

யோவான் 19:10,11, ''அப்பொழுது பிலாத்து: நீ என்னோடு பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறையவும் அல்லது விடுதலைபண்ணவும் எனக்கு அதிகாரமுண்டென்று உனக்குத் தெரியாதா என்றான். இயேசு அதற்கு மறுமொழியாக: விண்ணிலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால் என்மேல் உமக்கு ஒரு அதிகாரமும் இராது என்றார்.''

லூக்கா 22:66-70, ''நீ கிறிஸ்துவா? அதை எங்களுக்குச் சொல் என்றார்கள். அதற்கு அவர்: நான் உங்களுக்குச் சொன்னாலும் நம்பமாட்டீர்கள்... இது முதல் மனுமகன் சர்வ வல்லமையுள்ள கடவுளுடைய வலது பக்கத்தில் வீற்றிருப்பார் என்றார்.''

''வல்லமை கடவுளுடையது'' (சங் 62:11). எவ்வளவு சீக்கிரம் இவ்வுண்மையைக் கற்றுக்கொள்ளுகிறோமோ அவ்வளவு நல்லது — அப்படியானால்தான் நமக்கு விரோதமாய் வசைமொழிகளும் அவதூறுகளும் அள்ளி எறியப்படும்போது நாம் நற்பண்புகளை இழந்து போகாதிருப்போம்.

*ஆ) ''அமைதி பொன்னானது!''*

சொற்களைவிட அமைதியே வலிமையானதாயிருக்கும் நேரங்களுண்டு. என்ன பேசுவதென்று தெரியாததால் நாம் அமைதியா

யிருப்பதல்ல; அது நமது மனவுறுதி மற்றும் நிச்சயத்தைச் சொல்லாமல் சொல்லுவது. பிரதான குரு இயேசுவைப் பார்த்து, ''நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா?'' என்று கேட்டபோது, இயேசுவோ பேசாமலிருந்தார் (மத் 26:62,63). பிலாத்து அவரைப் பார்த்து, ''இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்கவில்லையா?'' என்றான். அவரோ ''ஒரு வார்த்தையும்'' மறுமொழியாய்ச் சொல்லவில்லை; அதனால் நாட்டின் அதிபதியாகிய அவன் மிகவும் ஆச்சரியப்பட்டான் (மத் 27:13,14).

இயேசு அமைதியாயிருந்து ஒன்றும் பேசாதிருந்ததேன்? பேதுரு அப்போஸ்தலன் அதற்கு விளக்கம் தருகிறார். 1 பேதுரு 2:23, ''அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.'' யுத்தம் கர்த்தருடையது என நாம் அறிந்திருந்தால் நாம் அமர்ந்திருந்து அவர் எவ்விதம் நம்மை விடுவித்து அமோக வெற்றியோடு வெளியே கொண்டு வருகிறாரென்று கண்டுகளிப்போம்.

*இ) ''இறைவார்த்தை நிறைவேறவேண்டும்!''*

வெளிச்சத்தில் கடவுள் நம்மிடம் சொல்லியவைகளை இருட்டில் நாம் சந்தேகிக்கக்கூடாது. இளம் வயதிலிருந்தே இயேசு இறைநூலைக் கற்பதில் தீவிரமாயிருந்தார். தம்மைக் குறித்துத் திருவார்த்தைகளில் எழுதப்பட்டுள்ள யாவற்றையும் தூயாவியானவர் மூலம் அவர் புரிந்துகொண்டார். கடவுளின் வார்த்தைக்கேற்பவே தமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள நெடுகவே தெளிவாக முயன்று வந்தார். மனுவுருவான திருவார்த்தையாகிய அவர் தமது வாழ்க்கையில் சிந்தையிலும், சொல்லிலும், செயலிலும் திருவார்த்தை முழுமையாக நிறைவேறுவதில் தமக்கிருந்த பொறுப்பை எப்பொழுதும் நினைவிற்கொண்டிருந்தார். அவர் பாடுபடும்போது இது மிக வெளிப்படையாய்க் காணப்பட்டது. பிரதான குருவின் வேலைக்காரனது காதைப் பேதுரு வெட்டிவிட்டபோது இயேசு பேதுருவிடம் என்ன சொன்னாரென்று கவனியுங்கள்: ''உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு; பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்துபோவார்கள். நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்



கொண்டால், அவர் பன்னிரெண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா? அப்படிச் செய்வேனானால், இவ்விதம் நடக்கவேண்டும் என்கிற வேத வாக்கியங்கள் எப்படி நிறைவேறும்?'' (மத் 26:52-56).

இக்கட்டான அச்சூழலில் இயேசு ஒரு பதறல் ஜெபம் கூட பண்ணவில்லை. இறைவாக்கியங்கள் அவர் கண் முன்னால் நிறைவேறுவதை அவர் பார்த்துக்கொண்டிருந்ததால் அமரிக்கையாயிருந்தார். நாமும் திருவசனத்தால் நம்மை நிரப்பிக்கொள்ளும்போது பாடுகளைச் சமாளிக்கும் சத்துவம் பெறுகிறோம்.

### *4. உடலில் வலி*

நான் அடிக்கடி செய்யும் ஜெபமாவது: ''ஆண்டவரே, நான் சாக ஆயத்தம்; ஆனால் உடலில் வலியென்றால் அப்பப்பா தாங்க முடியாது. எனது சகிப்புத்தன்மை மிகவும் குறைவு!'' என் ஜெபத்தைக் கடவுள் கேட்டு இரங்குவார் என்பது என் நம்பிக்கை.

சிலுவையிலறைப்படுதல் என்பது சாதாரணத் தண்டனையல்ல. வலி தாங்க முடியாதிருக்கும். இயேசு வெறுமனே ''காயப்பட்டார்'' என்று சொல்லக்கூடாது; அவர் ''நொறுக்கப்பட்டார்.'' பாடனுபவிக்கும் மேசியாவைத் தீர்க்கன் ஏசாயா தனது தீர்க்கதரிசனத்தில் அப்படித்தான் சித்தரிக்கிறான் (ஏசா 53:5,10). உடல் வலியை இயேசு எப்படிச் சமாளித்தாரெனக் கவனிப்போம் —

*அ) மனதில் ஆயத்தம்*

தாம் பாடுபட்டு மரணமடையவேண்டும் என்ற பொதுவான அறிவு தவிர்த்து, கொடூரமான வேதனையைச் சகிக்கவும் இயேசு தமது மனதை ஆயத்தப்படுத்திக்கொண்டார். அவர் எவ்விதம் பாடுபட வேண்டியதிருக்கும் என்பதைக் குறித்து அவருடன் பேச மோசேயையும் எலியாவையும் விண்ணகத் தந்தை அவரிடம் அனுப்பிவைத்தார். விண்ணிலிருந்து வந்துபோன இவ்விருவரைக் குறித்து மாற்கும் லூக்காவும் எழுதியுள்ளனர்: ''இயேசு பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும் கூட்டிக்கொண்டு ஜெபம்பண்ணுவதற்கு ஒரு

மலையின்மேல் ஏறினார் ... அப்பொழுது மோசே, எலியா என்ற இருவரும் மாட்சிமையோடு காணப்பட்டு, அவருடன் உரையாடி, அவர் எருசலேமில் நிறைவேற்றப்போகிற அவரது மரணத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்'' (லூக் 9:28-31).

எத்தனையோ பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் இருக்க ஏன் கடவுள் தமது மகனோடு பேசுவதற்காக மோசேயையும் எலியாவையும் மட்டும் தெரிந்தெடுத்து அனுப்பினார்? இவ்விருவரும் தங்களது காலங்களில் வெகுவாய்ப் பாடனுபவித்தவர்கள். மோசே மக்களால் புறக்கணிக்கப்பட்டு, உடன் ஊழியரால் அவதூறு பண்ணப்பட்டவன். எலியா ஒரு பெண்ணால் பயமுறுத்தப்பட்டுச் சாவை விரும்பினவன். இவ்விரு தீர்க்கர்களும் முக்கியமாக இயேசுவைத் தைரியப்படுத்தினார்கள் என்றே நினைக்கிறேன். தங்கள் பிரச்னைகளைப் பகிர்ந்துகொள்ள மக்கள் நம்மிடம் வரும்போது, நாம் ஏனோ தானோ என்றிருக்கக்கூடாது. அதுபோன்றதொரு பிரச்னைக்கு நம்மை ஆயத்தப்படுத்துவதற்காகக் கடவுள் கையாளும் முறையாக அது இருக்கலாமே! பாவிகளும் பரிசுத்தர்களும் ஒன்றுபோல்தான் பாடுபடுகிறார்கள். இதை யாரால் மறுக்கமுடியும்? எனவே பாடுகளைக் காணும்போதோ கேள்விப்படும்போதோ அதில் கடவுள் அனுப்பும் செய்தியைப் புரிந்துகொள்ளத் தவறிவிடாதீர்கள்.

*ஆ) உண்மையான அறிக்கை*

''என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?'' என்று இயேசு தமது உடல் வேதனையின் அங்கலாய்ப்பைத் தந்தையிடம் கொட்டினார்.

உடலின் வலியைக் குறித்துப் பேசக்கூடாது என்ற நவீன நூதன உபதேசத்தைக் குறித்து எச்சரிக்கை! ''சாதக'' அறிக்கை என்பது ஒரு மனோதத்துவம். திருமறை தரும் மருந்தோ ''உண்மை'' அறிக்கையாகும். சாதக அறிக்கையைப் பிரபலப்படுத்துவோருக்கு பிலிப்பியர் 4:8 என்றால் அலாதிப் பரியம். ஆனால் இந்த மருந்துப் பட்டியலில் முதன் முதல் வருவது எது தெரியுமா? ''உண்மையுள்ளவைகள் எவைகளோ ...'' நண்பரே, உள்ளதை உள்ளதென்று சொல்லுங்கள்!



பவுல் தனது உடலில் இருந்த பலவீனத்தை — ''மாம்சத்திலிருந்த முள்'' — மறைக்கவோ மறுதலிக்கவோ இல்லை (2 கொரி 12:7). தன்னைக் குட்டும்படி வந்த சாத்தானின் தூதன் என்று அதைப் பகிரங்கமாய் அறிக்கையிட்டார். உதவிக்காய் ஆண்டவரிடம் கதறினார். அவர் எதிர்பார்த்தபடி இல்லாவிட்டாலும் பதில் வந்தது. அவர் சுகமடையவில்லை; ஆனால் அவ்வேதனையைச் சகிக்க அருள்பெற்றார்.

உடலின் வேதனைக்காக என்ன உதவி வேண்டுமானாலும் மக்களிடம் கேளுங்கள். இயேசு குடிக்கத் தண்ணீர் கேட்டார். மருத்துவ உதவி நாடுங்கள். உங்களைக் கடவுளின் கரங்களில் சமர்ப்பியுங்கள்.

### *5. சுய பரிதாபம்*

கீழ்வருவன போன்ற கேள்விகளைக் கேட்டுச் சுயபரிதாபங் கொள்ள இயேசுவுக்குப் போதுமான காரணங்கள் இருந்தன —

''இது எனக்குத் தேவைதானா? எல்லாக் காரியங்களிலும் என் தந்தைக்கு நான் கீழ்ப்படியவில்லையா? நான் மக்களுக்கு நல்லது மட்டுந்தானே செய்தேன்? பாவிகளை மன்னித்தேன். நோயாளிகளைச் சுகமாக்கினேன். பசியிலிருப்போருக்கு உணவளித்தேன். சோர்ந்துபோனோரை உற்சாகப்படுத்தினேன். ஏன் ஆண்டவரே, ஏன்தான் நான் இப்படிப் பாடுபட வேண்டுமோ?''

பிறரது பிரச்னைகளுக்காய்க் கரிசனை கொள்வதின் மூலம் இயேசு சுயபரிதாபத்தை மேற்கொண்டார். மூன்று முக்கிய எடுத்துக்காட்டுகள் இதோ —

*அ) எருசலேம் பெண்மணிகள்*

எருசலேமின் தெருக்களில் இயேசு சிலுவையைச் சுமந்து நடந்து செல்கையில், அங்குள்ள பெண்கள் அவருக்காய் அழுது புலம்பினர். அவரோ அவர்களைத் திரும்பிப் பார்த்து, ''எருசலேம் குமாரத்திகளே, எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்'' என்றார் (லூக் 23:27-31). தாம் மகிமையும் மகிழ்வும்

நிறைந்த நாட்களை அனுபவிக்க பரலோகம் செல்கிறார்; ஆனால் அப்பெண்மணிகளுக்கும் அவர்களது பிள்ளைகளுக்குமோ வரவிருக்கும் நாட்கள் எவ்வளவு கொடியவையாயிருக்குமென இயேசு உணர்ந்தார். அவர்களது எதிர்காலப் பாடுகளைக் குறித்த எண்ணம் அவரது அன்றையப் பாடுகளிலிருந்து அவரது பார்வையைப் பறித்தது.

*ஆ) சிலுவைக் கள்ளன்*

இயேசுவுடன் சிலுவையிலறைப்பட்ட இரு கள்ளர்களில் ஒருவன் அடுத்தவனைப் பார்த்து, ''நீ இந்தத் தீர்ப்புக்குள்ளாகியும் கடவுளுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் செய்தவற்றிற்குத் தகுந்த பலனை அடைகிறோம்; இவரோ தகாதது ஒன்றையும் செய்யவில்லையே'' என்று அவனைக் கடிந்துகொண்டான் (லூக் 23:39-41). இவ்விதச் சொற்கள் இயேசுவின் காதுகளில் விழுந்த மாத்திரத்தில் அவை அவரைச் சுயபரிதாபத்தில் அமிழ்த்தியிருக்கமுடியும். அவரோ அந்தக் கள்ளனின் பரிதாப நிலையையே கவனிக்கலானார். அவன் தண்டிக்கப்பட்டது நியாயந்தான்; ஆனாலும் அவனது இறுதியான உணர்வையும் வேண்டுதலையும் இயேசு மதித்தார். ''நான் பரதீசு செல்கிறேன். நீயும் என்னோடு வா!''

*இ) சிலுவைக்கருகில் மாதுக்கள்*

சிலுவைக்கருகில் மம்மி மேரி, மாமி மேரி, மகதலேனா மேரி ஆகிய மூன்று மேரிகளும் நின்றுகொண்டிருந்தனர் (யோ 19:25). கண்ணீர் சொரிந்துகொண்டிருந்த அவர்களது கண்கள் இயேசுவைச் சுயபரிதாபத்திற்குள் தள்ளியிருக்கும். அவரோ அதற்கு இடங்கொடாமல், தமது தாயாரின் தேவையில் கரிசனை கொண்டார். மரியாளை யோவானுக்குத் தாயாகவும், யோவானை மரியாளுக்கு மகனாகவும் கொடுத்தார். சிலுவைக்கு எதிரில் சுவீகார வைபவம்! ''எனது தந்தை தமது மகனைத் திரும்பப் பெறுகிறார். ஆனால் மம்மி, நீங்கள் ஒரு மகனை இழக்கிறீர்கள். எனக்குப் பதிலாக யோவானை எடுத்துக் கொள்ளுங்கள்!''



பிறரது பாடுகள் நமது பாடுகளைவிட அதிகம். இந்த அறிவு என்று நமக்கு உதிக்கிறதோ அன்றுதான் பாடுகளைச் சமாளிப்பது எப்படி என நாம் கற்றுக்கொள்ளத் துவங்குவோம். யோபு தனது நண்பருக்காக வேண்டுதல் செய்தபோதுதான் கடவுள் அவன் இழந்தவைகளைத் திருப்பித் தந்தார் (யோபு 42:10).

***பலவீனம், ஆனால் பலம்!***

பாடு பாடுதான். ஆனாலும் பாடுபடும்போதுதான் மற்றெந்தச் சந்தர்ப்பத்தையும்விட அதிகமாகக் கடவுளின் வல்லமையை நாம் அனுபவிக்கமுடியும். எனவேதான் புலம்பிக்கொண்டே இராமல் பவுல் அப்போஸ்தலன் தனது பாடுகளைக் குறித்துப் பெருமிதம் கொண்டார். இதோ அவரது சாட்சி: ''ஆண்டவர்: என் கிருபை உனக்குப் போதும்; பலக்குறைவில் என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலக்குறைவுகளைக் குறித்து நான் மிகவும் மகிழ்ந்து மேன்மை பாராட்டுவேன். நான் **பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்!''** (2 கொரி 12:9,10). கிறிஸ்துவானவர் பாடுகளை எப்படிச் சமாளித்தார் என்பதைக் குறிப்பிட்டுப் பவுல் சொன்னது: ''அவர் **பலக்குறைவினால்** சிலுவையில் அறையப்பட்டிருந்தும், கடவுளின் **வல்லமையினால்** வாழுகிறார். நாமும் அவருக்குள் **பலக்குறைவானவர்களாயிருந்தும்**, கடவுளுடைய **வல்லமையினால்** அவருடன் வாழுவோம்!'' (2 கொரி 13:4). இதற்கு ''ஆமென்'' போடுவோம்!